සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

## வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
## Provincial Department of Education - NWP

**மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 09 - 2023 (2024)**
**Third Term Test - Grade 09 - 2023 (2024)**

# இஸ்லாம்

நேரம்: 2 மணி.

சுட்டெண் :

### பகுதி I

**அறிவுறுத்தல்கள் :**
- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**

01) ஸகாத் இஸ்லாத்தின் எத்தனையாவது கடமை
i. மூன்றாவது ii. இரண்டாவது iii. நான்காவது iv. ஐந்தாவது

02) பின்வரும் அமல்களில் எது ஹஜ்ஜின் பர்ளுகளுக்குள் அடங்கும்
i. அறபாவில் தங்குதல் ii. மினாவில் கல்லெறிதல்
iii. முஸ்தலிபாவில் தங்குதல் iv. தல்பியா ஓதுதல்

03) ஹதீஸ்களை ஒன்று திரட்டுவதற்கான பணிகளை ஆரம்பித்து வைத்த கலீபா
i. அபூபக்கர் (ரழி) ii. உமர் (ரழி)
iii. உஸ்மான் (ரழி) iv. உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்)

04) "இறைவா எனக்கு நீ உன் கருணையின் வாசலை திறந்து வைப்பாயாக" என்ற துஆவை நீர் ஓதவேண்டிய சந்தர்ப்பம்
i. வீட்டிற்குள் நுழையும் போது ii. பள்ளி வாசலுக்குள் நுழையும் போது
iii. வீட்டை விட்டு வெளியேறும் போது iv. பள்ளிவாசலைவிட்டு வெளியேறும் போது

05) கொன்ஸ்தாந்து நோபலைக் கைப்பறிய முஸ்லிம் வீரன்
i. தாரிக் பின் ஸியாத் ii. ஸலாஹுத்தீன் ஐயூபி
iii. முஹம்மத் அல் பாதிஹ் iv. முஹம்மத் பின் காஸிம்

06) "உம்முல் மஸாகின்" என்று அழைக்கப்படும் ஸஹாபிப் பெண்
i. மைமூனா (ரழி) ii. ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி)
iii. ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி) iv அஸ்மா பின்த் அபூபக்கர் (ரழி)

07) இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் பிறந்த ஹிஜ்ரி ஆண்டு
i. ஹிஜ்ரி - 194 ii. ஹிஜ்ரி - 150 iii. ஹிஜ்ரி - 80 iv. ஹிஜ்ரி - 209

08) இஸ்லாத்தை ஏற்று ஸஹாபாக்களைக் கண்களால் கண்டவர்களை அழைப்பது
i. தாபிஈன்கள் ii. தபஉத்தாபிஈன்கள்
iii. அன்சாரிகள் iv. முஹாஜிரீன்கள்

09) நபி மூஸா (அலை) அவர்கள் திருமணம் முடித்த பெண்ணின் தந்தை
i. சுலைமான் (அலை) ii. இப்றாஹிம் (அலை)
iii. சுஐப் (அலை) iv. யூஸுப் (அலை)

10) துர்ஸீனா மலையுடன் தொடர்பு பட்ட நபி
i. சுலைமான் (அலை) ii. இப்றாஹிம் (அலை)
iii. மூஸா (அலை) iv. யூஸுப் (அலை)

11) முதல் முதலாக நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட சூராவின் வசனங்களது எண்ணிக்கை
i. சூரா நாஸின் முதல் ஐந்து வசனங்கள்
ii. சூரா பாத்திஹாவின் ஏழு வசனங்கள்
iii. சூரா அலக்கின் முதல் ஐந்து வசனங்கள
iv. சூரா பகராவின் முதல் ஏழு வசனங்கள்

12) அல்குர்ஆன் தொகுக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்ட ஸஹாபி
i. ஹுதைபதுல் யமானி (ரழி)
ii. உமர் இப்னு கத்தாப் (ரழி)
iii. அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி)
iv. ஸைத் இப்னு ஸாபித் (ரழி)

13) பள்ளி வாசலுக்குள் நுழைந்ததும் தொழப்படும் தொழுகை எது
i. இஸ்திஹாரா தொழுகை
ii. இஸ்திஸ்கா தொழுகை
iii. தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுகை
iv. வித்ர் தொழுகை

14) அல்லாஹ்வின் பண்புகளில் ஒன்றான 'அத்ல்' என்ற பதத்தின் கருத்து
i. பரிபூரணமானவன்
ii. உயிரோடிருப்பவன்
iii. முழுமையான அறிவுள்ளவன்
iv. நீதி செலுத்தக் கூடியவன்

15) பின்வரும் தொழுகைகளுள் கஸ்ரும் ஜம்மும் செய்ய முடியாத தொழுகை எது
i. இஷா தொழுகை
ii. மஃரிப் தொழுகை
iii. அஸர் தொழுகை
iv. சுபஹ் தொழுகை

16) சூரா லுஹாவில் காணப்படும் வசனங்களின் எண்ணிக்கை
i. 11 வசனங்கள்
ii. 15 வசனங்கள்
iii. 19 வசனங்கள்
iv. 20 வசனங்கள்

17) மதீனா சாசனம் என்ற ஒப்பந்தம் இடம் பெற்ற நகரம்
i. மக்கா
ii. மதீனா
iii. அகபா
iv. ஹுதைபியா

18) சைவர்களின் முதற்கடவுள் யார்
i. பிரம்மன்
ii. பிள்ளையார்
iii. சிவன்
iv. விஷ்னு

19) சுவனத்தின் பெயர்களில் ஒன்றைக் குறிக்கும் பதம்
i. ஜஹீம்
ii. ஜன்னதுல் அத்ன்
iii. சகர்
iv. நார்

20) 'ஷபாஅதுல் குப்ரா" என்ற பெரிய மன்றாட்டத்தை செய்வதற்கு மறுமையில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டவர்
i. நபி மூஸா (அலை)
2. நபி ஈஸா (அலை)
iii. நபி முஹம்மத் (ஸல்)
4. நபி இப்றாஹிம் (அலை)

21) நபி (ஸல்) அவர்களது இறுதி ஹஜ் எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது
i. ஹிஜ்ரி - 6
ii. ஹிஜ்ரி - 5
iii. ஹிஜ்ரி - 9
iv. ஹிஜ்ரி - 10

22) ஹிஜ்ரி 204 ஆம் ஆண்டில் நைஸாபூரில் பிறந்த இமாம்
i. இமாம் அபூதாவுத் (ரஹ்)
ii. இமாம் முஸ்லிம் (ரஹ்)
iii. இமாம் புகாரி (ரஹ்)
iv. இமாம் திர்மிதி (ரஹ்)

23) முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இறுதியாக மணமுடித்த மனைவியின் பெயர்
i. உம்மு ஹபீபா (ரழி)
ii. மய்மூனா (ரழி)
iii. ஸைனப் பின்த் ஜஹ்ஸ் (ரழி)
iv. ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி)

24) முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அன்பு வைத்தல் என்பதைக் குறிக்கும் அறபுப்பதம்
i. மஹப்பதுல்லாஹ்
ii. மஹப்பதுர்ரஸூல்
iii. மஹப்பதுஸ்ஸுன்னா
iv. தாஅதுர்ரஸூல்

25) ஒருவரிடம் 10 ஒட்டகைகள் இருந்தால் அவர் பின்வருவனவற்றுள் எதை ஸகாத் கொடுக்கவேண்டும்
i. 1 ஆடு
ii. 2 ஆடுகள்
iii. 1 ஒட்டகம்
iv. 1 மாடு

- **26 முதல் 30 வரையான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்பு (தர்தீபுத்திலாவத், இஹ்ராம், தர்தீபுந்நுஸூல், தௌர், கபன், ஹிரா)**

26) ஒரு மையத்திற்கு அணிவிக்கப்படும் வெள்ளை ஆடை ............................ என அழைக்கப்படும்.

27) ஹஜ் செய்வதற்காக ஒருவர் செல்லும் போது ................................ ஆடை அணிந்து நிய்யத் வைத்துக்கொள்ள வேண்டும்.

28) நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செல்லும் போது ...................................... குகையில் 3 நாட்கள் தங்கினார்கள்.

29) முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹீ ......................................... என்ற குகையில் அருளப்பட்டது.

30) அல்குர்ஆன் வசனங்கள் ஓதப்படும் ஒழுங்கு .................................... எனப்படும்.

- **31 முதல் 35 வரையான வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

31) ஸஹீஹுல் புஹாரி என்ற ஹதீஸ் கிரந்தத்தில் 7572 ஹதீஸ்கள் உள்ளன ( )

32) ஆண்களுக்கு பட்டாடை அணிவது தடை செய்யப்பட்டுள்ளது ( )

33) ஈஸா (அலை) அவர்களது சீடர்கள் ஹவாரிய்யூன் என அழைக்கப்பட்டனர் ( )

34) மைமூனா (ரழி) அவர்கள் அபூ ஸுப்யானின் மகளாவார் ( )

35) அல்குர்ஆன் வசனங்கள் பூமிக்கு முழுமையாக அருளப்பட 23 வருடங்கள் எடுத்தது ( )

- **36 முதல் 40 வரையான வினாக்களுக்கு பகுதி A இலிருந்து பொருத்தமான கூற்றை தெரிவு செய்து பகுதி B உடன் இணைக்குக**

36.

| A | B |
|---|---|
| 1. ஹஜ்ஜை மாத்திரம் செய்வதாக நிய்யத் வைத்தல் | முஃஜிஸா |
| 2. நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அற்புதம் | முத்தபகுன் அலைஹி |
| 3. ஸஹீஹைன் | இஸ்திஃபார் |
| 4. பாவமன்னிப்பு கோறுதல் | இப்ராத் |
| 5. மிகவும் உயர்வான சுவனம் | ஜன்னதுல் பிர்தவ்ஸ் |
| | கிரான் |
| | கராமத் |

(40 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களுக்குமாக , மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. சுருக்கமாக விடை தருக

i. இக்ரஃ என்பதன் கருத்து யாது?

ii. ஸுனன் அர்பஆவில் இடம்பெறும் கிரந்தங்கள் இரண்டு தருக?

iii. ஸகாத் என்ற சொல்லின் கருத்து யாது?

iv. பிர்அவுன் எந்த நாட்டு அரசனாவான்

v. ஜனாபத் உடையோர் செய்யக்கூடாத இரண்டு விடயங்களை எழுதுக?

vi. மஸ்ஜிதின் சிறப்புப் பற்றி ஒரு ஹதீஸை எழுதுக?

(4) www.PastPapers.WiKi (3)
Download Term Test Papers, Short Notes From One Place!

vii. ஹதீஸ் துறை இமாம்கள் இருவரைக் குறிப்பிடுக ?

viii. நபி (ஸல்) அவர்கள் இஹ்ராம் அணிந்த இடம் எது ?

ix. ஈமான் கொள்ள வேண்டிய விடயங்களுள் இரண்டை எழுதுக ?

x. மறுமை நாளைக் குறிக்கும் இரண்டு பெயர்களைத் தருக ?

(2 x 10 =20 புள்ளிகள்)

02. (i) ஹஜ் கிரிகையுடன் தொடர்பான முக்கிய இடங்கள் இரண்டு தருக ?

(ii) ஹஜ்ஜின் பர்ளுகள் நான்கு தருக ?

(iii) ஹஜ்ஜின் மூலம் கிடைக்கும் பயன்கள் நான்கை எழுதுக ?

(2+4+4 =10 புள்ளிகள்)

03. (i) பிர்அவ்னின் மாளிகையில் வளர்ந்த நபி யார் ?

(ii) மூஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்ட இரண்டு அற்புதங்களை தருக?

(iii) நபி ஈஸா (அலை) அவர்களைப் பற்றி நான்கு விடயங்களை எழுதுக ?

(2+4+4 =10 புள்ளிகள்)

04. (i) உம்மஹாத்துல் மு∴மினீன் என்பதன் கருத்து யாது ?

(ii) உம்மஹாதுல் மு∴மினீனில் உள்ள நால்வரின் பெயர்களைக் குறிப்பிடுக ?

(iii) நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹபீபா (ரலி) யை திருமணம் முடித்த சம்பவத்தை சுருக்கமாக குறிப்பிடுக?

(2+4+4 =10 புள்ளிகள்)

05. (i) ஜனாஸாவுக்கு செய்ய வேண்டிய கடமைகள் இரண்டை எழுதுக ?

(ii) ஒரு ஜனாஸாத் தொழுகையின் 4 தக்பீருக்குப் பின்னும் ஓதப்பட வேண்டிவைகளைத் தருக ?

(iii) ஸகாத் மூலம் கிடைக்கும் நான்கு பயன்களை எழுதுக ?

(2+4+4 =10 புள்ளிகள்)

06. (i) இஸ்லாமிய வரலாற்றில் புகழப்படும் இரண்டு இஸ்லாமிய வீரர்களை தருக ?

(ii) சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நான்கு விடயங்களைக் குறிப்பிடுக ?

(iii) உண்பதற்கு அல்லாஹ்வால் ஹராமாக்கப்பட்ட உணவு வகைகள் நான்கைக் குறிப்பிடுக?

(2+4+4 =10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

(4) WWW.PastPapers.WiKi (4)



Download Term Test Papers, Short Notes From One Place!

සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education - NWP

## மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 09 - 2023 (2024)
## Third Term Test - Grade 09 - 2023 (2024)

## இஸ்லாம்

விடைப்பத்திரம்

### பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1. i | 6. iii | 11. iii | 16. i | 21. iv |
| 2. i | 7. i | 12. iv | 17. ii | 22. ii |
| 3. iv | 8. i | 13. iii | 18. ii | 23. ii |
| 4. ii | 9. iii | 14. iv | 19. ii | 24. ii |
| 5. iii | 10. iii | 15. iv | 20. iii | 25. ii |

26. கபன் 27. இஹ்ராம் 28. ஹிரா 29. தௌர் 30. தர்தீபுத் திலாவத்
31. × 32. ✓ 33. ✓ 34. × 35. ✓
36. ஹஜ்ஜை மாத்திரம் செய்வதாக நிய்யத் வைத்தல் (இப்ராத்)
37. நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அற்புதம் (மு.ஃஜிஸா)
38. ஸஹீஹைன் (முத்தபகுன் அலைஹி)
39. பாவமன்னிப்பு கோறுதல் (இஸ்தி.ஃபார்)
40. மிகவும் உயர்வான சுவனம் (ஜன்னதுல் பிர்தவ்ஸ்)

(40 புள்ளிகள்)

### பகுதி II

01.
1. ஓதுவீராக
2. ஸுனன் இப்னு மாஜா, ஸுனன் நஸாஇ, ஸுனன் அபூதாவுத்
3. தூய்மை, அபிவிருத்தி, வளர்ச்சி
4. எகிப்து
5. தொழுதல், பள்ளியில் தரித்தல், க.ஃபவைத் தவாப் செய்தல், குர்ஆனை ஓதுதல், தொடுதல் . சுமத்தல்
6. "எவருடைய உள்ளம் மஸ்ஜிதுடன் நெருக்கமாகப் பிணைந்திருக்கின்றதோ அவர் மறுமையில் அர்ஷின் நிழலின் கீழ் இருப்பார்"
7. இமாம் புகாரி (ரஹ்), இமாம் முஸ்லிம் (ரஹ்), இமாம் அபூதாவுத் (ரஹ்), இமாம் திர்மிதி (ரஹ்), இமாம் நஸாஇ (ரஹ்), இமாம் இப்னு மாஜா (ரஹ்)
8. துல் ஹுலைபா
9. அல்லாஹ், மறுமை, நபிமார்கள், வேதங்கள், மலக்குகள், கலாகத்ர்
10. யவ்முல் ப.ஃஸ், யவ்முல் கியாமா, யவ்முல் ஹிஸாப், ய்முல் ஆகிரா, யவ்முத்தீன் ......

(2 x 10 = 20 புள்ளிகள்)

02.
1. க.ஃபா, ஸபா, மர்வா, மினா, முஸ்தலிபா, அறபா
2. நிய்யத் வைத்தல் , அரபாவில் தரித்தல், தவாபுல் இபாழாவை நிறைவேற்றல், ஸ.ஃயு செய்தல், தலை முடி களைதல், ஒழுங்கு முறையாக செய்தல்.
3. சகோதரத்துவம், சமத்துவம், ஒற்றுமை, விட்டுக்கொடுத்தல், சகித்துக் கொள்ளல், கூட்டுவாழ்வு, மறுமை நினைவு

(2 + 4 + 4 = 10 புள்ளிகள்)

(2) WWW.PastPapers.WiKi (1)



Download Term Test Papers, Short Notes From One Place!

03. 1. நபி மூஸா (அலை)

2. கைத்தடி பாம்பாக மாறுதல் , உள்ளங்கை பலபலத்தல்

3. மர்யம் (அலை) அவர்களது மகன்.
தந்தையில்லாது அல்லாஹ்வின் பேரருளால் பிறந்தவர்
இஸ்ரவேலர்களுக்கு நபியாக அனுப்பப்பட்டார்கள்.
இன்ஜீல் வேதத்தைப் பெற்றவர்.
பல அற்புதங்களை நிகழ்திக்காட்டினார்களா.

(இது போன்ற பல விடயங்களுள் 4 எழுதப்பட்டிருப்பின் 4 புள்ளிகள் கொடுக்கவும்.)

(2 + 4 + 4 = 10 புள்ளிகள்)

04. 1. மு.ஃமீன்களது தாய்மார்கள்

2. ஸைனப் பின்த் ஜஹ்ஸ் (ரலி) , ஸைனப் பின்த் ஹுஸைமா (ரலி) , மைமூனா (ரலி)
உம்மு ஹபீபா (ரழி)

3. உம்மு ஹபீபாவின் ஆரம்ப பெயர் ரம்லா ஆகும்.
தன் கணவருடன் இஸ்லாத்தை ஏற்று அபீஸீனியா போய் வாழ்ந்தார்.
கணவன் கிரிஸ்தவ மதத்திற்கு போய்விட்டதால் ரம்லா விதவையானார்.
நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹபீபாவின் நிலையறிந்து நஜ்ஜாஸி மன்னனுடன் கதைத்து மணமுடித்துக் கொண்டார்கள்

(2 + 4 + 4 = 10 புள்ளிகள்)

05. 1. குளிப்பாட்டல் , கபனிடல் , தொழுவித்தல் , அடக்கம் செய்தல்

2. சூரா பாத்திஹா ஓதல், நபி மீது ஸலவாத்து ஓதல் , மையத்திற்காக துஆ கேட்டல், ஸலாம் கொடுத்தல்

3. பொருளாதார ஏற்றத்தாழ்வு நீங்கும் , செல்வம் பெருகும், வறுமை நீங்கும், பரக்கத் ஏற்படும், மறுமையில் ஈடேற்றம் கிடைக்கும் , அன்பு வளர்ந்து குரோதம் நீங்கும்.

**(இது போன்ற விடயங்களுள் 4 எழுதப்பட்டிருப்பின் 4 புள்ளிகள் கொடுக்கவும்.)**

(2 + 4 + 4 = 10 புள்ளிகள்)

06. 1. ஸலாஹுத்தீன் ஐயூபி , முஹம்மத் பின் பாதிஹ்

2. அனைத்து மக்களும் ஆதமின் சந்ததி என நோக்குதல், அண்டை அயலவருடன் சுமூகமாகப் பழகுதல் , தவறுகளை மன்னித்தல் , பொது நிகழ்வுகளில் பங்கெடுத்தல், கஸ்டமான நேரங்களில் உதவுதல், பிரதேச , தேசிய நலன்களில் பங்கெடுத்தல் , நல்லிணக்கம் ஏற்படும் கலந்துரையாடல்களில் , ஒன்று கூடல்களில் பங்கேற்றல்

(இது போன்ற விடயங்களுள் 4 எழுதப்பட்டிருப்பின் 4 புள்ளிகள் கொடுக்கவும்.)

3. பன்றி இறைச்சி , இரத்தம் , செத்தவைகள் , போதை தரக்கூடியவைகள் , உடலுக்கு , உயிருக்கு ஆபத்தைத் தரக் கூடியவைகள்

(இது போன்ற விடயங்களுள் 4 எழுதப்பட்டிருப்பின் 4 புள்ளிகள் கொடுக்கவும்.)

(2 + 4 + 4 = 10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
(2) WWW.PastPapers.WiKi (2)

Download Term Test Papers, Short Notes From One Place!


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න